## பா.ஜ.க.வினரைப் போல் நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் அல்ல;

# நாட்டின் விடுதலைக்காகவும், மொழிக்காகவும் பாடுபட்டவர்கள் இஸ்லாமியர்கள்!

## திருப்பூரில் நடைபெற்ற இஸ்லாமிய ஜமா அத் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**திருப்பூர், மே 6-**

**நாட்டின் விடுதலைக்காகவும், மொழிக்காகவும் பாடுபட்டவர்கள் இஸ்லாமியர்கள் என்றும், அதே சமயம் நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் பா.ஜ.க.வினர் என்றும் திருப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய போது கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டார்.**

04/05/2025 ஞாயிற்றுக்கிழமை, திருப்பூர் ஷாகின்பாஃக் திடலில், திருப்பூர் ஷாகின்பாஃக் போராட்டக்குழு மற்றும் ஒருங்கிணைந்த இஸ்லாமிய ஜமாஅத் கூட்டமைப்பு சார்பில் ஒன்றிய அரசு கொண்டு வந்த வக்ஃபு திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறக் கோரி நடைபெற்ற மூன்றாம் நாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு திமுக துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கண்டன உரையாற்றினார்.

அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:-

“இந்த கூட்டத்திற்கு வந்திருக்கக் கூடிய நம்முடைய உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுடைய அன்பு உடன்பிறப்புகளே... உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தை வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்,

கண்டனப் பொதுக்கூட்டத்தில் வாழ்த்துகளா என்று நீங்கள் சிந்திக்க கூடும். ஏனென்றால் எவ்வளவு அழுத்தங்கள் வந்தாலும் எத்தனை துன்பங்கள் வந்தாலும் அதை எதிர்த்து நின்று நம்முடைய உரிமைகளுக்காக நாம் போராடுவோம் என்று, இங்கே கூடிய இந்த கூட்டத்தை பார்க்கும் பொழுது நிச்சயமாக வெற்றி நமக்குத்தான் என்ற வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமக்கு நன்றாக தெரியும் இன்று மத்தியிலே இருக்கக்கூடிய ஒன்றிய அரசு இங்கே இப்போது பெய்யும் தூறல் போல தான். சிறிது நேரம் இந்தத் தூறல் நம்மை மழை வந்துவிடுமோ என்ற ஒரு அச்சுறுத்தலாக இருக்கும். அதுபோல அங்கே அமர்ந்து கொண்டு அவர்கள் நம்மை மிரட்டி கொண்டிருக்கிறார்கள். . நிச்சயமாக விடியல் வரும் உதயசூரியன் உதிக்கும் என்ற நம்பிக்கை இங்கே இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் இருக்கிறது.

**அரசியல் சட்டத்தை**
**அழிக்க நினைக்கும் பா.ஜ.க.!**

அவர்கள் இந்த நாட்டை துண்டாடுவதற்கு இந்த நாட்டில் இருக்கக்கூடிய இறையாண்மையை முழுவதுமாக அழிப்பதற்கு இந்த நாட்டின் அடிப்படையாக இருக்கக் கூடிய ஜனநாயகத்தை நாம் எல்லோரும் கொண்டாட கூடிய போற்றக்கூடிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் நமக்காக உருவாக்கி தந்திருக்கக் கூடிய அரசியல் அமைப்புச் சட்டத்தை ஒழித்து விட வேண்டும் அதை மாற்றிவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கக் கூடிய ஆட்சிதான் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பா.ஜ.க. ஆட்சி என்பதை நாம் மறந்து விடக்கூடாது

அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு ஒவ்வொரு நாளும் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சாதாரண சாமானிய மக்களுக்கு எதிரான சட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், மாநில உரிமைகளை எல்லாம் ஒவ்வொரு நாளும் பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள் ஒவ்வொரு மசோதாவும் மாநில உரிமைகளை தட்டிப் பறிக்கக்கூடிய மசோதாக்களாக மாறி இருப்பதை நாம் பார்க்கலாம்.

நம் மீது திணிக்கவேண்டும் என அவர்கள் நினைத்துக் கொண்டிருக்க கூடிய புதிய கல்விக் கொள்கை, அது மட்டுமில்லாமல், இங்கு ஆளுநர்களை கொண்டு வந்து திணித்து பிஜேபி ஆட்சியிலே இல்லாத ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்கள் எந்த அளவிற்கு அங்கு இருக்கக்கூடிய அரசிலே அரசியலிலே தலையிட்டு அங்கே இருக்கக்கூடிய ஆட்சியை ஒவ்வொரு நாளும் தவிக்க வைக்க கூடிய திட்டங்களோடு அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் பார்க்க முடியும்.

அதேபோலத்தான் வக்ஃப் சட்டத் திருத்தமும்., எவ்வளவு தந்திரமாக அந்த மசோதாவை கொண்டு வருகிறார்கள் என்றால் சிறுபான்மையினரின் சொத்துக்களை எல்லாம் பாதுகாக்கிறோம் என்றெல்லாம் சொல்லித்தான் கொண்டு வந்தார்கள். ஆனால் இந்த மசோதாவை கொண்டுவருவதற்கு ஒரே ஒரு சிறுபான்மை இஸ்லாமிய எம்பி கூட பாஜகவில் இல்லை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மையாக இருக்கக் கூடிய புத்த மதத்தைச் சேர்ந்த கிரன் ரிஜிஜு அவர்கள் மூலமாக இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்.

இஸ்லாமியர்கள் அதிகமாக படிக்கக் கூடிய வாய்ப்பு இல்லாதவர்களாக பொருளாதாரத்தில் மேம்பாடாதவர்களாக பெரும்பான்மையாக இருக்கக் கூடிய இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள் என்று அந்த அரசாங்கம் சொல்லித் தந்ததை கிரன் ரிஜிஜு பேசுகிறார்.

**உதவித் தொகையை**
**நிறுத்திய ஒன்றிய அரசு!**

நான் கேட்கிறேன் சிறுபான்மை மக்கள் மீது இவ்வளவு அக்கறை இருக்கக்கூடிய ஒரு அரசாங்கம், எதற்காக மைனாரிட்டிகளுக்காக இந்த நாட்டிலே இருக்கக்கூடிய இஸ்லாமியர்களுக்கு என்று மட்டும் இல்லை மற்ற சிறுபான்மை மாணவர்களுக்கும் கொடுத்து வந்த ஸ்காலர்ஷிப் போன்ற எத்தனையோ கல்விக்கான உதவித்தொகையை நிறுத்த வேண்டும்? அப்படி நிறுத்தியிருக்கக்கூடிய அரசு தான் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பாஜக அரசு.

சிறுபான்மை மக்கள் மீது அக்கறை இருப்பது போல நடிக்கக்கூடிய ஒரு ஆட்சி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி. இந்த சட்டத்தில் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சொன்ன எந்த திருத்தத்தையும் கருத்திலே எடுத்துக் கொள்ளாமல் கொண்டு வருகிறார்கள்

அரசியல் சட்டத்தின் 26 ஆவது பிரிவு மத உரிமைகளை இந்திய மக்களுக்கு வழங்கக்கூடிய ஒரு சட்டம். வழி வழியாக நம்பக்கூடிய அந்த வழிமுறைகளை வரையறைகளை பின்பற்றக் கூடிய உரிமைகளை அவர்களுக்கு தரக்கூடிய அந்த சட்டத்தை முற்றிலுமாக மறுதலிக்கக் கூடிய ஒரு சட்டத் திருத்தம்தான் இந்த வக்ஃப் அமென்ட்மென்ட், இப்படித்தான் முத்தலாக் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்த சட்டத்தை கொண்டு வந்த போது அதை நான் எதிர்த்து பேசிய போது ஒரு அமைச்சர் என்னிடம், ‘இஸ்லாமிய சகோதரிகள் மீது உங்களுக்கு அக்கறை இல்லையா’ என்று கேட்டார்.

நான் கூறினேன், ‘எனக்கு இஸ்லாமிய சகோதரிகள் மீது அக்கறை இருக்கிறது. அதேபோல இந்த நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை சகோதரிகள் மீதும் அக்கறை இருக்கிறது.

உங்களுக்கு இஸ்லாமிய சகோதரிகள் மட்டும்தான் கண்ணுக்குத் தெரிகிறார்களா? மற்ற குடும்பங்களில் இருக்கக்கூடிய ஆண்கள் தன்னுடைய குடும்பத்தை விட்டு அங்கே இருக்கக் கூடிய பெண்களை விட்டுவிட்டு நீங்கும் பொழுது... தன் கடமையை செய்யாமல் இருக்கும்பொழுது ஒரு தவறு செய்யும் போது அவர்களை எல்லாம் விட்டுவிட்டு... இஸ்லாமே ஏற்றுக் கொள்ளாத முத்தலாக்கை சொல்லும் பொழுது ஒரு ஆண்டு சிறை தண்டனை என்று சொல்லுவது ஒரு சமூகத்திற்கு எதிரான சட்டமா? இல்லையா? தொடர்ந்து ஒரு சமூகத்திற்கு எதிராக செயல்பட கூடிய ஒரு ஆட்சி தான் பாஜக ஆட்சி’ என்று கூறினேன்.

இஸ்லாமிய சகோதரிகள் மீது அக்கறை இருப்பது போல இந்த சட்ட திருத்தத்தின் வழியாக நாங்கள் வக்பு வாரியத்துக்குள் பெண்களைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள்.



உங்களுக்கு முன்னாடியே தமிழ் நாட்டுல வக்பு வாரியத்தின் தலைவராகவே ஒரு பெண் இருந்திருக்கிறார். முதலமைச்சர் தளபதியின் ஆட்சியில் தமிழ்நாட்டில் இரண்டு பெண்கள் இப்போது வக்ஃப் வாரிய உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட முற்போக்கு சிந்தனைகளோடு இருக்கக்கூடியவர்களை பார்த்து நீங்கள் நாங்க பெண்களுக்கு வக்ஃப் வாரியத்தில் இடத்தை தருகிறோம் என்கிறார்கள்.

**வேறு மதத்தவரை**
**சேர்ப்பது ஏன்?**

இந்த வக்ஃப் சட்டத் திருத்தத்தில் இன்னொரு முக்கிய அம்சம். இஸ்லாம் மதத்தை சாராத அந்த வழியிலே இல்லாமல் வெளியிலே இருக்கக்கூடிய வெவ்வேறு வேறு சில மதங்களை சார்ந்தவர்கள் வேறு நம்பிக்கைகளை உடையவர்கள் கொண்டுவந்து அந்த போர்டில் போட வேண்டிய அவசியம் என்ன?

கோயில் நடத்தக்கூடிய கல்லூரியில் ஒரு ப்ரோபசர் வேலைக்கு இன்னொரு மதத்தை சார்ந்தவராக இருந்தால் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு எதிராக போராட கூடியவர்கள்... ஒரு வேலை தருவதாக இருந்தால் கூட அதை எதிர்க்கக் கூடியவர்கள், வேறு மதத்தை சார்ந்தவர்கள் இரண்டு பேரை உள்ள கொண்டு வந்து அதை நாங்கள் நிர்வாகம் செய்கிறோம் என்று சொன்னால் இதை எப்படி ஏற்க முடியும் என்றுதான் திராவிட முன்னேற்ற கழகமும் நாமும் கேட்கும் கேள்வி. .

மத நம்பிக்கை என்பது தனிப்பட்ட ஒன்று. எனக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். அதே நேரத்தில், நம்பிக்கை உடையவர்களை நாம் மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும் யார் எந்த நம்பிக்கை சார்ந்தவராக இருந்தால் அந்த நம்பிக்கைகளை பற்றி நாம் விவாதிக்கலாம். ஆனால் அவர்களை எதிர்த்து அவர்களுடைய உரிமைகளை எதிர்த்து சட்டங்கள் இயற்றுவதற்கு எந்த அரசாங்கத்திற்கும் உரிமை கிடையாது.

ஆனால் இவர்கள் வக்ஃப் வாரியத்திற்கு ஒருவர் தன்னுடைய சொத்தையோ தன்னுடைய பணத்தையோ தான் எதையாவது தானமாக கொடுக்க வேண்டும் என்று நினைத்தாலோ அவர்கள் ஐந்து ஆண்டுகள் இஸ்லாமியர்களாக இருந்திருக்க வேண்டும் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளாக இஸ்லாமியர்களாக இருக்கிறார்கள் என்றோ இல்லை என்றோ எப்படி கண்டுபிடிப்பார்கள்?

தானமாக கொடுப்பது என்பது என்னுடைய உரிமை. நான் எந்த மதத்தை சார்ந்தவராக இருந்தாலும்! இந்த நாட்டில் இஸ்லாமியர்கள் இந்து கோயிலுக்கு எதையுமே தானமா கொடுத்தது இல்லையா? அதே போல இந்துக்கள் இஸ்லாமிய மசூதிகளுக்கு எந்த நன்கொடையும் கொடுத்ததில்லையா? கொடுத்திருக்கிறார்கள். இது தானே இந்த நாட்டின் பண்பாடாக கலாச்சாரமாக இருக்கிறது.

இப்படி மதங்களின் வழியாக ஒருவரை ஒருவர் பிரித்துக் கொள்ளாமல் சகோதரர்களாக சகோதரிகளாக வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு நாட்டிலே... இங்கே வந்து நீ ஐந்து ஆண்டுகள் இஸ்லாமியராக வாழ்ந்திருந்தால் தான் உனக்கு அந்த வப்ஃபு வாரியத்திற்கு தானம் கொடுப்பதற்கு உரிமை உண்டு என்றால் அதை வரையறுக்க நீ யார் என்று கேள்வியை நாம் எப்படி கேட்காமல் இருக்க முடியும்?

**வக்பு வாரியத்தை**
**சிதைக்கும் பா.ஜ.க.!**

எந்தெந்த வகையில் இந்த வக்பு வாரியத்தில் இருக்கக்கூடிய அந்த சட்டங்களை சிதைக்க முடியுமோ அந்த வகையிலெல்லாம் சிதைத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன் இந்த நாட்டில், எல்லாவற்றுக்குமே ஒரு டாக்குமெண்டேஷன் இருக்க முடியுமா? நூறு வருஷத்துக்கு முன்னாடி யாராவது சொத்து எழுதி வச்சிட்டு போயிருப்பாங்க. அதுக்கு டாக்குமென்டே இருக்காது. சில நேரத்துல அதுல ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கலாம், ஒரு மசூதி கட்டப்பட்டு இருக்கலாம்.

ஆனால் அந்த திருத்தப்பட்ட சட்டத்தின்படி, டாக்குமெண்டேஷன் இல்லையென்றால், அது வக்ஃப் சொத்து இல்லை. அதுமட்டுமில்லாமல் அவர்களுக்கு உரிமை உள்ள சொத்திலே 12 ஆண்டுகள் யாராவது குடியிருந்து விட்டார் என்றால், அது அவர்களுக்கே சொந்தம்.

என் ஊரில் எனக்கு இடம் இருக்கிறது. நான் வேலைக்காக வெளியூர் போய்விட்டேன். 12 வருடம் கழித்து வந்தால் அங்கே இன்னொருவர் வீடு கட்டியிருக்கிறார். ஊர் திரும்பிய நான், என் சொத்தை கேக்குறதுக்கு எனக்கு உரிமை இருக்கா இல்லையா? ஆனா இந்த சட்டத்தில் இந்த மாற்றத்தை அவர்கள் நியாயத்திற்கு எதிராக நீதிக்கு எதிராக கொண்டு வருகிறார்கள்.

எனக்குத் தெரிந்து மும்பையில் ஒரு வீடு இருக்கிறது அந்த வீடு கட்டப்பட்டு இருக்கக்கூடிய இடம் வக்பு வாரியத்தை சார்ந்த இடம் என்று கோர்ட்டில் ஒரு கேஸ் இருக்கு. அந்த வீடு யாரோட வீடு? (அம்பானியின் வீடு என கூட்டத்தில் இருந்து பதில் வருகிறது) இந்த நாட்டில் மிக அதிகமாக பேசப்பட்ட ஒரு வீடு . அந்த வீடு வக்ஃப் வாரியத்துடைய இடத்திலே நிலத்திலே கட்டப்பட்டு இருப்பதாக ஒரு வழக்கு இருக்கிறது 12 வருஷம் அந்த வீட்டில் அவர் இருந்தால், அது அவருடைய வீடு ஆகிவிடுமா? பாவம், அவர் இந்த நாட்டின் மிகப்பெரிய ஏழை.

அதுமட்டுமில்லாமல் திரும்பத் திரும்ப அவர்கள் சொல்லக்கூடிய ஒரு பொய். ஒரு சில ஆண்டுகளிலேயே இஸ்லாமியர்களுடைய சொத்துக்கள் இரண்டு மடங்காக அதிகரித்து இருக்கிறது என்று.

நான் கேட்கிறேன் நீங்கள் ஒரு இடம் வாங்கினீர்கள் என்றால், அதே இடம் 10, 15 வருடங்களில் நீங்க எந்த மதிப்புக்கு வாங்கினீங்களோ அதே விலையில் இருக்குமா? நிச்சயமாக இரட்டிப்பாகும். பக்கத்திலே ஒரு தொழிற்சாலை வந்தால், வேறு முன்னேற்றங்கள் வந்தால் நிலத்தின் மதிப்பு மூன்று மடங்காகும், நான்கு மடங்காகும்.

அதுமட்டுமல்லாமல்... நான் உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு இஸ்லாமியரும் தான் ஈட்டக்கூடிய பணத்தில் ஒரு பகுதியை தானமாக தன் வாழ்க்கையிலே அவர்கள் தர வேண்டும். வருமானத்தில் ஒரு பகுதியை வழங்க வேண்டும் இஸ்லாமியர்கள் தன்னுடைய வருமானத்திலே பணங்கள் வழங்கப்படும் போது அந்த சொத்தின் மதிப்பு கூடும் பொழுது நிச்சயமாக அது அதிகரிக்கத்தான் செய்யும், இது அடிப்படை.

**பொய்யை ஒன்றிய அரசு**
**பரப்பிக் கொண்டிருக்கிறது!**

இதை ஒரு பொய் கதையாக ஒரு புனை கதையாக அவர்கள் உருவாக்கி, இந்த நாடு முழுவதும் ஏதோ இஸ்லாமியர்களுக்குதான் இந்த நாடே சொந்தமாக போகிறது என்ற ஒரு பொய்யை அவர்கள் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்,

எந்த சொத்து யாரிடம் இருந்தால் உங்களுக்கு என்ன கவலை? அவர்களும் இந்த நாட்டின் மக்கள். அவர்களும் இந்த நாட்டிலே உரிமை இருக்கக் கூடியவர்கள் என்பதே முதலிலே நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்களை விட பிஜேபியை விட இங்கே இருக்கும் இஸ்லாமிய சகோதரிகளுக்கும், சகோதரர்களுக்கும் உரிமை அதிகம்.

இந்த நாட்டின் விடுதலைக்காக, மொழிக்காக பாடுபட்டவர்கள் அவர்கள். உங்களைப் போல, இந்த நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்

இப்படி இந்த சட்டத்தை கொண்டு வந்ததே இஸ்லாமிய சொத்துகளை அபகரிக்கத்தான்.

தென்னிந்தியாவில்தான் கோயிலில் இருக்க கூடிய சொத்துக்கள் அரசாங்கத்தின் வழியாக நிர்வாகம் செய்யப்படுகிறது. ஏனென்றால்

கோயில்களை கட்டியது, அதற்கான சொத்துக்களை அதிகமாக எழுதி வைத்தது இங்கே அரசர்களாக இருந்த மன்னர்கள் தான். அவர்கள் ஆட்சியிலே இருந்தார்கள், அவர்கள் கோயில்களை உருவாக்கினார்கள், எப்படி உருவாக்கினார்கள்? மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கினார்கள். அப்போது அரசாங்கம் என்பது அரசர்கள்., இப்பொழுது அரசாங்கம் என்பது ஆட்சியிலே இருக்கக்கூடிய ஒரு இயக்கமோ, முதலமைச்சர் அல்லது அமைச்சர்கள். அதனால்தான் கோயில்களை தொடர்ச்சியாக நிர்வாகிக்கக் கூடிய உரிமையை இப்போது அரசாங்கம் பெற்றிருக்கிறது.

ஆனால் வக்ஃப் சொத்துக்கள் தனிப்பட்டவர்கள் எழுதி வைத்த சொத்துக்கள். அதனால் அதற்கும் இதற்கும் வேறுபாடுகள் இருக்கின்றன.

தென் இந்தியாவில் இருக்கக்கூடிய கோவில்களிலே இருக்கக்கூடிய சொத்துக்களின் கணக்கை எடுத்து மதிப்பீட்டை பார்த்தோம் என்றால் நிச்சயமாக அது இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய இஸ்லாமியர்களுடைய சொத்துக்களை விட அதிகமானது என்று கணக்கீடுகள் தெரிவிக்கிறது. ஏனென்றால் தென்னிந்தியாவில் பிஜேபி சொல்லுவதை நாம் ஏற்றுக் கொள்ளாமல் அதை நிர்வகிக்கக்கூடிய அதிகாரத்தை அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிறது.

அங்கே வட இந்தியாவில் என்ன நடக்கிறது என்றே நமக்கு தெரியாது. யார் அந்த கோயில் சொத்துக்களை என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பது கூட நமக்கு தெரியாத ஒரு நிலையிலேயே தான் நின்று கொண்டிருக்கிறோம்.

**இஸ்லாமியர்கள் மீது மட்டும்**
**அக்கறை கொள்வது ஏன்?**

வட இந்தியாவில் நீங்கள் நம்பும் கோயில்களைப் பற்றி கவலை இல்லை. ஆனால் இஸ்லாமிய சமூகத்தின் மீது இவ்வளவு அக்கறையோடு அந்த சொத்துக்களை எல்லாம் நாங்கள் பாதுகாக்க வேண்டும், பராமரிக்க வேண்டும் என்று சொல்லும் பொழுது தான் அது கேலிக்கூத்தாக வேடிக்கையாக இருக்கிறது.

வக்ஃப் வாரிய இடத்தை இதுவரை அது யாருடைய சொத்து என்று முடிவு செய்வது அந்த வாரியம்தான்.. ஆனால், இப்பொழுது கலெக்டர் முடிவு செய்யலாம் நீங்கள் இந்த மசோதாவை கொண்டு வந்த காரணமே ஒவ்வொரு இடத்தில் இருந்தும் இந்த சொத்துக்களை பிடுங்குவதற்கான வழிமுறைதான்.

பொருளாதார ரீதியாக இஸ்லாமியர்களை ஒடுக்குவதற்காக இஸ்லாமியர்கள் கையிலே இருக்கக்கூடிய சொத்துக்களை பறிப்பதற்காக அவர்கள் பொருளாதார ரீதியாக ஒரு நல்ல நிலைக்கு மாறிவிடக்கூடாது என்ற ஒரு நிலையை உருவாக்குவதற்காக தான் இந்த சட்டத் திருத்தம்.

இதை நாம் எதிர்ப்போம் எதிர்ப்போம் தொடர்ந்து போராடுவோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதை எதிர்த்து சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தார்கள், தமிழ்நாடு இதை ஏற்றுக் கொள்ளாது, நிராகரிக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி மக்களுக்கு எதிராக சிறுபான்மையின மக்களுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய ஆட்சி விரைவிலே முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

ஏனென்றால் இந்த நாடு காப்பாற்றப்பட வேண்டும் இந்த நாட்டின் இறையாண்மை காப்பாற்றப்பட வேண்டும்

காஷ்மீரில் பெரிய சாதனையை படைத்து விட்டோம் என்று பெருமையோடு சொல்லி, காஷ்மீருக்கு கொடுக்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை பிடுங்கினார்கள். ஆனால் இன்று டூரிஸ்ட்களாக சென்ற மக்களை கூட பாதுகாக்க கூடிய துப்பில்லாத ஒரு ஆட்சி தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் இன்றைக்கும் இழந்த அந்த உயிர்களைப் பற்றி நீங்கள் பேசவில்லை. அங்கேயும் அரசியல் செய்து கொண்டிருக்கக் கூடிய ஒரு இழிவான நிலையை தான் இங்கே நான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**அம்பானி, அதானி**
**மீது மட்டும் கவலை!**

இப்படி மக்களைப் பற்றி கவலைப் படாமல், அவர்கள் கவலைப்படுவதெல்லாம் அம்பானி அதானி ஆகிய இரண்டே இரண்டு பேர் பற்றித்தான்.

அவர்களுக்கான சட்டங்கள் அவர்களை பாதுகாக்க கூடிய சட்டங்கள் அவர்களுடைய தொழில் வளர்ச்சி பெறுவதற்கான சட்டங்கள் என்று அந்த இரண்டே பேருக்காக ஒரு ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு துயரமான நிலையை தான் நாம் இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

அதை தாண்டி பெரும்பான்மை மக்கள் மீதோ, பெண்கள் மீதோ, அடித்தட்டில் வாழக்கூடிய மக்கள் மீதோ, ஒடுக்கப்பட்ட மக்கள் மீதோ எந்த கவலையும் இல்லை அக்கறையும் இல்லை... பெரும்பான்மை மேல ரொம்ப கவலைப்படுவதாக சொல்கிறார்கள். ஆனால், பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு தரக் கூடிய ஸ்காலர்ஷிப் 77% இந்த பட்ஜெட்டுக்கு பிறகு நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சாதாரணமாக நம் வீட்டில் படிக்கக் கூடிய பிற்படுத்தப்பட்ட பொருளாதார ரீதியாக வாய்ப்புகள் வசதிகள் இல்லாத பிள்ளைகள் படிக்க வேண்டியவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அந்த உதவித்தொகையை கூட நிறுத்தக்கூடிய அரசு தான் இந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு.

வருங்காலத் தலைமுறைகளுக்கு எதிராக, இந்த நாட்டின் இறையாண்மைக்கு எதிராக, இந்த நாட்டின் ஒற்றுமைக்கு எதிராக இந்த நாட்டின் மொழிகளுக்கெல்லாம் எதிராக, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை மாநிலங்களுக்கும் எதிராக, இந்த நாட்டின் மக்களுக்கு உரிமைகளுக்கு எதிராக இருக்கக்கூடிய அந்த அரசாங்கத்தை விரைவிலே ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டும். இந்த நாட்டை மீட்டெடுப்போம் அதுதான் நம்முடைய கடமை” இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்றினார்.

திருப்பூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வராஜ், மாநகராட்சி மேயர் தினேஷ்குமார், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் மாலதி நாகராஜன், மகளிர் பிரச்சாரக்குழு செயலாளர் உமா மகேஷ்வரி, ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழக தலைவர் ஹைதர் அலி, ஷாகின்பாக் போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் அகமது கபீர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்!